செய்தி வெளியீடு எண்: 857 நாள்: 4.10.2010

## பத்திரிகைச் செய்தி

### ஐ.எஸ்.ஐ. முத்திரை இல்லாத மின்சாதனங்கள் பறிமுதல்

29–9–10 அன்று தொழில் வணிகத் துறையின் கீழ் உள்ள தரக்கட்டுப்பாடு ஆணை செயலாக்க மையத்தின் துணை இயக்குநர் (மின் மற்றும் மின்னணு) (பொறுப்பு), அவர்கள் எம்.ஜி.ஆர் நகர் மற்றும் ஜாபர்கான்பேட்டை பகுதிகளில் மின்சாதனங்கள் விற்பனை செய்யும் கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்ட போது இரு மின்சாதன கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ஐ.எஸ்.ஐ. முத்திரை இல்லாத ரூபாய் 25,000/– மதிப்புடைய மின்சாதனங்கள் (ஐ.எஸ்.ஐ. முத்திரை அத்தியாவசியமாக்கப்பட்டது) இந்திய அரசின் தரக்கட்டுப்பாடு ஆணை 2003ஐ மீறிய செயல் என்பதால் கைப்பற்றப்பட்டது.

அந்நிறுவன உரிமையாளர்கள் மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்து சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

தரக்கட்டுப்பாடு ஆணை மீறுவோர்க்கு இந்திய தர நிர்ணய அமைவன சட்டப்பிரிவு 33ன் படி அதிகபட்ச அபராதமாக ரூ.50,000–ம் மற்றும் அல்லது அதிகபட்சமாக ஓராண்டு சிறைதண்டனை வழங்கப்படும்.

30/9/10

துணை இயக்குநர்
(மின் மற்றும் மின்னணு) (பொறுப்பு)

...யீடு, இயக்குநர்,
...கள் தொடர்புத் துறை,
சென்னை-9